மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.3/2019

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| த/பெ. | அண்ணாமலை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 37 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 07.09.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 2ம் வாதி/ வாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 04.05.1990 தேதிய பதிவு கிரையப்பத்திரத்தின் அசல் 1ம் பிரதிவாதியிடம் இருப்பதால் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது ஆட்சபணையுடன் வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான பசலி 1425க்கான அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.11.2018 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலுக நகல் அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மேற்படி அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலஎண். 9க்கான புலப்படம் கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.03.2018 தேதிய என் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா-சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.12.2017 தேதிய 1ம் பிரதிவாதி பெயரிலான மின்கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.